# தலைவரின் கடிதம்



• டான்ஸ்ரீ ஸா ஹுவாட் லை

## வெற்றியும் சாதனைகளும் கண்ட ஆண்டு

மதிப்புமிக்க அன்பு பங்குதாரர்களுக்கு,

உங்கள் கின்னஸ் ஆங்கர் பெர்ஹாட் நிறுவனத்திற்கு மற்றொரு மிகுந்த வெற்றிகரமான ஆண்டை மறுபடி உங்களுக்கு அறிவிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

இது, நிறுவனம் பொதுபங்குச் சந்தைப் பட்டியலில் இடம்பெற்ற 40ஆவது ஆண்டாகும். இந்தச் சுபவேளை யை இதுவரையில் சாதித்திராத சிறந்த விளைபயனோடு நாம் குறிப்பிடுவது என்பது மிகவும் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் நமது வாடிக்கையாளர்களுக்கும் நமது அக்கறையாளர் களுக்கும் நமது ஊழியர்களுக்கும் நமது மதிப்புக்குரிய பங்குதாரர்களுக்கும் சேர்த்து நன்றி.

இந்த ஆண்டில் நமது வருவாய் தனது உறுதிமிகு வளர்ச்சியைத் தொடர்ந்தது. வரிக்கு முந்திய லாபம் (முந்திய ஆண்டின் 14.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில்) 20.4 சதவீதமாக உயர்ந்து (2003 நிதியாண்டின் RM107.363 மில்லியன் உடன் ஒப்பிடுகையில்) RM129.254 மில்லியன் ஆனது. இது, சாதனை வாணிகப் பணமான RM886.206 மில்லியன் அல்லது கடந்த ஆண்டின் RM796.595 மில்லியனை காட்டிலும் 11.2 சதவீதம் கூடுதலால் சாதிக்கப்பட்டது.

இந்தக் கவர்ச்சியான நிதி நிகழ்வு நம் அமைப்பின் பயனை மேம்படுத்தவும் செலவைச் சிக்கனமாக்கவும் முக்கியமாக நமது தர அடையாளத் தன்மையை

# தலைவரின் கடிதம்



• நமது வளர்ச்சிக்கு உரம் சேர்க்கும் குழு உணர்வு




• வெற்றியின் உந்துதல்

வலுவாக்கவும் நிறுவனம் தொலைநோக்கோடு மேற்கொண்ட விரிவான நடவடிக்கைகளால் ஏற்பட்டதென உங்கள் வாரியம் கருதுகிறது. இந்த நடவடிக்கைகள் இப்போது உங்கள் நிறுவனத்தை சாதகமான ஒவ்வொரு சந்தை நிலைமையையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு மட்டுமன்றி அவ்வப்போது ஏற்படக்கூடிய பாதகமான, வெளிச் சவால்களையும் சமாளிக்கக் கூடிய வலுவான நிலையிலும் வைத்திருக்கின்றன என நாங்கள் நம்புகிறோம். இவ்வகையில் நம் தொழிலுக்கான அண்மைய கலால் வரியின் அதிகப்படியான உயர்வால் உங்கள் நிறுவனத்துக்கு உண்டாகக்கூடிய விளைவுகளை நான் உணர்ந்தே இருக்கிறேன். எனினும் நம் நிர்வாகத்தின் இயல்பான வலுவாலும் நம் தர அடையாளங்களுக்கான வலுவான ஆதரவாலும் நாம் மேலோங்குவோம் என்கிற நம்பிக்கையோடு உள்ளேன்.

இந்த 2004 ஜூன் 30 உடன் முடிவுற்ற ஆண்டில் நம் செயல்திறன் தனிச் சிறப்புமிக்கதாகிறது. ஏனெனில் நம் வெற்றி பியர் மற்றும் ஸ்டவுட் ஆகிய இரண்டு பிரிவுகளுக்குமான சந்தைப் பங்கு அதிகரிப்பால் உருவானதாகும். டைகர் மற்றும் ஹெய்னிகன் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக விற்பனை அளவில் தங்களின் வலுவான இரட்டை இலக்க வளர்ச்சியை நிலை நிறுத்தி உள்ளன. இவற்றோடு நம் இரண்டு உயரிய தரச் சின்னங்கள் பியர் பிரிவில் கின்னஸ் ஆங்கர் பெர்ஹாட்டின் வளர்ச்சியை வலுவடையச் செய்துள்ளன.

# தலைவரின் கடிதம்




• வெற்றியை நோக்கிய நமது பணியாளர்களின் அர்ப்பணிப்பும் கடப்பாடும்




• ஹெய்னிகனுக்கும் இசைக்கும் வலுவான ஆதரவு

தவிர ஸ்டவுட் பிரிவிலும் அண்மைய ஆண்டுகளில் பெருத்த வளர்ச்சியைப் பதிவு செய்ததன் மூலம் கின்னஸ் தனது முதன்மை நிலையை மேலும் திடமாக்கிக்கொள்ள முடிந்திருக்கிறது.

பல விருதுகளை நாம் பெற்றதாலும் இந்த ஆண்டு தனிச் சிறப்புடையதாகிறது. வெற்றியின் முத்திரையாக 2004 உலக பியர் கிண்ணத்தின்போது ஐரோப்பியப் பாணி பில்செனர் பிரிவில் டைகர் தங்கப் பதக்கப் பரிசைப் பெற்றது, ஹெய்னிகன் ஆசியாவின் சிறந்த 1000 தரச் சின்னங்களில் 35ஆவது இடம் பெற்றது, கின்னஸ் டியாகோ ஆசியா தீரச் செயல் முயற்சி வட்டார கின்னஸ் விருதுகள் ஒன்பதில் நான்கைத் தட்டி வந்தது இவ்விருதுகள் நமது மகத்தான தரச் சின்னங்களின் வலுவான தன்மைக்கு நிறைவான சான்றாகும்.

முன்னோக்கிப் பார்க்கும்போது நம் உடனடி எதிர்காலம் சிரமமானதாக இருக்கும் என்று அஞ்சுகிறேன். அரசாங்கம் 2005 வரவு செலவுத் திட்டத்தில் தீர்வை செலுத்தப்பட்ட மாவூறல் வடிநீர்மத்திற்கு (மால்ட் லிக்கர்) மிகவும் அதிகமான கலால் வரி விதித்திருப்பது பெருத்த அடி கொடுக்கும் என்றும் எனவே எம்எல்எம் வளர்ச்சி குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடத்தப்படுகிற மலிவான இறக்குமதி பியர்களாலும் மதுபானத்தாலும் நெருக்குதல் கூடுதலாகி போட்டி கடுமையானதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் ஒரு வலுவான பொறுப்பான நிர்வாகத்தைப் பெற்றிருப்பதால் இத்தடைகளைச் சமாளிப்பதற்கு இப்போது நாம் ஒரு நல்ல நிலைமையில் இருப்பதாக நான் கருதுகிறேன்.

# தலைவரின் கடிதம்



• சரியான பானத்தை வழங்குதல்

இவ்வெற்றியும் சாதனைகளும் நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் ஊழியர்களுடைய கடுமையான பணியும் பங்களிப்பும் இன்றி சாத்தியமாகி இராது. கின்னஸ் ஆங்கர் பெர்ஹாட் இந்த அளவு வெற்றிபெற நிறுவனத்தின் பாலான அவர்களுடைய அர்ப்பண ஈடுபாட்டுக்கு இயக்குநர்கள் வாரியத்தின் சார்பில் நம் பாராட்டைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும் ஆண்டு முழுவதும் நிறுவனத்தின்பால் மிகுந்த ஆதரவுடனிருந்த பங்குதாரர்களுக்கும் நம் நன்றி உரித்தாகிறது. கடைசியாக, ஆனால் இறுதியாக அல்ல நமது விநியோகிப்பாளர்களுக்கும் சில்லறை வணிகர்களுக்கும் நிரப்பீட்டாளர் களுக்கும் முக்கியமாக நமது பல்வகைத் தரச் சின்னங்களுக்கு நெடுங்கால மாகப் பக்கபலமாக இருந்து வருகிற நமது பயனீட்டாளர் களுக்கும் நம் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உங்களுக்கு நன்றி.

டான்ஸ்ரீ ஸா ஹ்வாட் லை
தலைவர்
9 November 2004